சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கான உணவூட்டுச் செலவினம் ரூ.450/– ஆக உயர்த்தி 01.06.2010 முதல் நடைமுறைப்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.தி.ந 1) துறை.</u>

<u>அரசாணை(நிலை) எண்.22</u> <u>நாள்.04.06.2010</u>

வைகாசி 21. <u>திருவள்ளுவர் ஆண்டு 2041</u>

<u>படிக்கப்பட்டது.</u>

1. அரசாணை (நிலை) எண்.185, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள். 27.07.1998.
2. அரசாணை (நிலை) எண்.143, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21.08.2007.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.4040/சி.ப.3/07 நாள் 10.03.2010.

----------

<u>ஆணை.</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் சிறப்புப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு மாதமொன்றுக்கு ரூ.200/– (ரூபாய் இருநூறு) வீதம் 10 மாதங்களுக்கு அரசு உணவூட்டு மானியமாக ஆண்டு தோறும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஆதரவற்ற சிறுவர், சிறுமியருக்கான சிறப்பு இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு 2007 – 2008 ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.450/–ஆக உயர்த்தி உணவூட்டுச் செலவினம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் சிறப்புப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான பராமரிப்பு மானியம் கடந்த 11 ஆண்டுகளாக உயர்த்தப்படாமலேயே இருப்பதாகவும், தற்போதுள்ள விலைவாசியில் இத்தொகையைக் கொண்டு மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரைச் சிறந்த முறையில் பராமரிப்பது மிகவும் இயலாத காரியம் என்பதால் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்படும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரை மேலும் சிறந்த முறையில் பராமரிக்க, இத்தொகையை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது எனவும் தெரிவித்துள்ளார். எனவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 6500 மாணவ, மாணவிகளுக்கு 10 மாதங்களுக்கான உணவூட்டுச் செலவினத்தினை ஒருவருக்கு ரூ.200/–லிருந்து ரூ.450/– ஆகவும், அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 2300 மாணவ மாணவிகளுக்கு 12 மாதங்களுக்கான உணவூட்டுச் செலவினத்தினை ஒருவருக்கு ரூ.225/–லிருந்து ரூ.450/–ஆகவும் உயர்த்தி வழங்கிட கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திரானளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்த பின்னர், அரசு சிறப்பு பள்ளிகளில் படிக்கும் 2300 மாணவ மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் உணவூட்டுச் செலவினம் ரூ.225/–லிருந்து ரூ.450/– ஆகவும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 6500 மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டுச் செலவினம் ரூ.200/- லிருந்து ரூ.450/- ஆகவும் உயர்த்தி வழங்கியும் மேற்படி, உணவூட்டுச் செலவின உயர்வினை 01–06–2010 முதல் நடைமுறைப்படுத்தவும் ஆணையிடுகிறது. இந்த உணவூட்டு செலவினம் அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டு தோறும் 12 மாதங்களுக்கும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டு தோறும் 10 மாதங்களுக்கும் வழங்கப்படும் இதற்கான மொத்த செலவினம் ரூ.4,16,70,000/– (ரூபாய் நாலு கோடியே பதினாறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தொடர் செலவினத்துக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது இச்செலவினம் 2010–2011 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3,74,18,000/– போக தேவைப்படும் கூடுதல் நிதியொதுக்கம் ரூ.42,52,000/– ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| வ. எண் | தலைப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2010 – 2011. | கூடுதல் நிதி ஒதுக்கிடு |
|---|---|---|---|
| அ | <u>அங்கீகரிக்கப்பட்ட சிறப்புப் பள்ளிகள்</u><br>2235 – சமூகப் பாதுகாப்பு நலனும் –02– சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – CE – மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு நிதி உதவி – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –09– ஏனையவை (து.தொ.கு 2235 –02–101–CE–6798) | ரூ.2,92,50,000/– | – |
| ஆ | <u>பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு பள்ளிகள்</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02–சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AA பார்வையற்றோர் பள்ளி – 67– உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை (து.தொ.கு 2235-02-101-AA-6798) | ரூ.27,36,000/– | ரூ.21,24,000/– |
| இ | <u>காது கேளாதோருக்கான அரசு சிறப்பு பள்ளிகள்.</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத்தினாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AR காதுகேளாதோர் பள்ளிகள் – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை (து.தொ.கு 2235 -02-101- AR – 6794) | ரூ.49,37,000/– | ரூ.15,43,000/– |
| ஈ | <u>கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு பள்ளி.</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – BE கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09 – ஏனையவை ( த.தொ.கு 2235 -02-101-BE-6799) | ரூ.2,79,000/– | ரூ.5,31,000/– |

| | | | |
|---|---|---|---|
| உ | <u>மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம்.</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் – 102 குழந்தைகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AZ – மனவளர்ச்சி குன்றியோர் நல நிலையம் தொடங்குதல் – 67 உணவளிக்கும் /உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை (த.தொ.கு 2235–02–102–AZ–6796) | ரூ.2,16,000/– | ரூ.54,000/– |
| | <u>மொத்தம்</u> | 3,74,18,000/– | ரூ.42,52,000/– |

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில், வரவு – செலவு திட்ட மதிப்பீடு 2010–2011ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.3,74,18,000/–க்கு மேல் தேவைப்படும் கூடுதல் தொகையான ரூ.42,52,000/– ஒரு "புதுத் துணைப்பணி குறித்த செலவினமாகும்." இதற்கென சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது1) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும் இதற்கென உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு செலவு பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7.இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண்.27325/10 நிதி (மா.தி.ந) நாள்.02.06.2010 படியும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.207 (இருநூற்று ஏழு) பெற்றும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்,
அரசு செயலாளர்.

பெறுநர்.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் சென்னை–9.
செயலரின் நேர்முக உதவியாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இ.கோ / உ. ந.
நிதி (ச.ந/வ.செ.பொது–I / வ.செ.பொது. II)த் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.